1344
1344
4.22

786

பிஸ்மில்லாஹிற்றகுமாநிற்றஹீம்.

றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்
மீதும், நாகூர் ஷாகுல்ஹமீது ஆண்
டவரவர்கள் மீதும் பாடிய,

# கனகரெத்தினக் கீர்த்தனை.

இஃது
திண்டுக்கல் தாலூகா வேல்வார்கோட்டை,
ம. சே. டக்கீர்முகம்மது லெப்பை சாயபு அவர்சள்
இயற்றியது,

ஷை யூர்,
சி. மை. அமீதாஒலி ருவுத்தரவர்கள்
பொருளுதவியால்,

---

மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீராமச்சந்திரவிலாசம் பிரசில்,
பதிப்பிக்கப் பெற்றது.

---

...ர் காபிரைட்.

1922 [ அணா 2.

Q7:417
N22
183519

786

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றஹீம்.

றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்கள்
மீதும், நாகூர் ஷாகுல்ஹமீது ஆண்
டவரவர்கள் மீதும் பாடிய,

# * கனகரெத்தினக் கீர்த்தனை. *

இஃது
திண்டுக்கல் தாலூகா வேல்வார்கோட்டை,
ம. சே. பக்கீர்முகம்மது லெப்பை சாயபு அவர்களியற்றி

ஷை யூர்,
சி. மை. அமீதாஒலி ருவுத்தரவர்கள்
பொருளுதவியால்,

மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீராமச்சந்திரவிலாசம் பிரசில்,
பதிப்பிக்கப் பெற்றது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1922 [அணா 2.

7 -DEC 19
1344
4.22

சித்தையங்கோட்டை கா. ச. முகம்மது அப்துல்
காதர் ருவுத்தர் அவர்களியற்றிய,

## சாற்றுக்கவி.

கதிபெருக வருமறையி னிதியென வுதித்ததிருக்
காசினிக் கதிபதியென

கயிலாய போற்றவரு மினியமொழி வாசகங்
கழறுநற்பூம பூமன்

துதிபெருக வருநபி முகம்மத ரெனுந்திருந்
தோழரி நாமமதனை

தொள்புவி தன்னிலே பரவிவர நாடியே
சொல்லுங்கவிச் சிங்கனைப்

பதிபெருக வருந்திரு வேலுவார் கோட்டையின்
பக்கீர்முகம்ம தென்போன்

பாடிய கனகரெத் தினமாலை யென்றவோர்
பாவுரை நாவிலுரைக்க

விதிபெருக மதிபெருக முதியவ னருள்பெருக
வேண்டுவோர்க் கென்னாளுமே

வேதா குணந்தருகு ணதா அருந்தவ
விநோதாபுரந் தருள்கவே.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183519

பிஸ்மில்லாஹிர்றகுமானிர்றஹீம்.

# கனகரெத்தினக் கீர்த்தனை.

வெண்பா.

மாமேவு வாசமல ருகியேயெவ் வுயிர்க்குந்
தாமேவு வல்ல தயாபரனே—பூமேவு
கற்பகம தாய்விளங்கு காத்திமு லன்பியாமேர்
நற்பதமே பாடவருள் றஹீம்.

இசைந்தசூலம் என்ற மெட்டு.

அகதுகதாகிய சமமெதன உலகெலா மமைத்தோனே-அரு
லவணிவின்கடல்மலை திசைமுகில் சுதிர்மதி வகுத்தோனே
சுரர்நரர்ஜின்கனம்பல்லுயிர்யாவையுந்தொகுத்தோனே திரு
சுடருறுசொர்க்கமும் அருசொடு குருசையு வகுத்தோனே
எரிபொரிகணலுரு நரகமு மரவமு மமைத்தோனே-நல
எழில்மணியாகவே முத்தொழி லனுதினம் மிகுத்தோனே
உனதுடஹபீபென வருநறை கமழ்புய முகம்மதின்-மீது
கனகமாமணியெனுங் கவிதனை உரைசெய அருள்வாயென்
மனமதில்கவியது நிறைவுடன் வரமருள் புரியாகூ-யென
வல்லவாபல்லுயிர் உள்ளமே உறைந்திடும் அல்லாகூ
தனதுடபுகழ்தனை மனமதிற் துதிசெயு மடியேனை
தனியவனெபக்கீர் முகம்மதுக் கருள்செயு றகுமானே

வெண்பா.

தக்க விறையோன றவதூத ராவொளிரும்
மக்க மகமூதுநபி வள்ளலே—பக்கீர்
முகமதுநின் பாத முளரி தலைமேயந்தேறன்
அகமகிழச் செய்வா யருள்.

பாலனே பழனியங்கிரி என்ற மெட்டு.

இந்துஸ்தான்-தோடி-ஏக-தாளம்.

பல்லவி

சாஸீமே கதியருள் புரிதிரு தாஸீமே (சா)

அநுபல்லவி.

கருவமுடையபாந்தன் உயிர்தனைவதைத்தீர்
காரண மாசப்பூவில் பதிதனை யமைத்தீர்
அருமறைப்பொருள் ஆகிர் நபியென உதித்தீர்
ஆதி—வீத—நிதி—யெனுங் (சா)

சரணங்கள்

வாசமுலவு மக்க மாநகர் புறந்தீர்
விசை மதினாக செகைச் சிறந்தீர்

தோலம் அசற்றமயில் ரூபமாயிருந்தீர்
துதி—நிதம்—பதம்—தருங் (கா)

மாசிலாக் கிந்திலொளி வாகவும் யிருந்தீர்
மறைமைப் பதியில்முத்தி தரவரம் புரிந்தீர்
மேசமுட னிறையோன் தனைநித மரிந்தீர்
நிறை—யுறு—மறை—புகழ் (கா)

ஆசையுடனே உங்கள் பதமதைத் தேடி
அருமையாய் அனுதினம் பதமதைப் பாடி
தாஸன்பச்கிர் முகம்மத் சொல்தனை நாடி
தயை—புரி—தினங்—திருக் (கா)

மதினமே மோரேசையா என்ற மெட்டு.

இராகப்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஞாலமிசை வந்தநபி நாயகமே
றசூல் நாயகமே றசூல் நாயகமே (ஞா)

அநுபல்லவி.

சீலமுயர் நாதா திருமுகம் மூதா (ஞா)

தோகையரு.

கோலாகலமான மூலாதாரப் பொருளுணர்ந்த
குறைசிகுல தீபமே
கூட்டியதினை நாடெங்கும் நாட்டிய குணசுகுன்ற
மான குதூகலமே.

(முடுகு சந்தம்.)

கொங்குல வுப்மதி னந்தனி லிலங்கும்
அப்பர் கமழ்ந்துமே சங்கை விளங்கும்
கோதரு மாதவ
நாதரே பாதுசார் •

(பல்லவி யெடுப்பு.)

கொற்றவர்கள் புகழு நற்றவ முற்றகுல (ஞா)

தோகையரு,

பாலமிசை பேரும்போது பதரிடாமல்
பாதுகாப்பதுன் பாரமே
பற்றியருளுற்று சுவர்க்கம் புகுத்தாட்டும்
பரமநருள்பெற்ற தவமே.

முடுகுச்சந்தம்.

பங்கயி லாமலே யெங்கு விளங்கும்
அங்கமிசை நபு வத்து துலங்கும்
பாவமே நீங்கக்
காவலே தாங்கப்

(பல்லவி யெடுப்பு.)

பாலன்பக்கீர்முகம்மூது பக்திக்கருளெப்போது (ஞா)

அமாரநபி என்ற மெட்டு பின்முடுகு.

இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

பல்லவி.

சித்தம்வையுர் திரு செம்மல் முகம்மதே (சி)

அநுபல்லவி.

பக்தியுடன் துதிக்கும் பாலன்மே லெந்தநாளும் (சி)

சரணம்.

வித்துருமத்தொளிவாய் விண்ணோர்புகழ்தெளிவாய்
வேலைப்புவி நிரை சீலத்திரு மறை
வாலைப்பயிர் தரு நரூலை மகிழ்வொடு (சி)

(தோகையரு)

வற்றுப்புகழுற்று நற்றவம்பெற்றநல்
மாமணியே
நற்றுமரைக்கபஞ் சூழ்மதீன மாநகர்
வாழ்கவ பணியே.

(ஷை சரணம் எடுப்பு)

அட்டால தேசம்புகழ் பட்டாபி சேகங்கமழ்
அருமைப் பதமென் சிரம்வைத்துனு தினம்
வறுமைத் துயறா கருணைக்கடலே உன் (சி)

தோகையரு

நத்திடுஞ்சித்தர்க்கு முத்திதரூந் திரு
நட்சகுறுகிய நாயகமே
பத்தடையாள முற்றவா துங்கமான
நல் பாக்கியமே

(ஷை சரணம் யெடுப்பு)

நித்தம்பக் கீர்முகம்மத் நந்துங்கவிக் கருள்வோர்
நிரைவுற்றிடு முகிழ் நுறைபற்றிடு புகழ்
நறைபெற்றிடு மகிழ் மறைமுற்றிலும் புகழ் (சி)

மாப்பிள்ளைச்சமத்தனடி என்ற மெட்டு.
இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மருமலர்ப்பாதந் தாருமே வள்ளல் காருமே (ம)

அநுபல்லவி.

விரிகடல் கரையோரம் விளங்கு ஹமீதானேரும்
திருவடர்நாகை நாதரும் சையதானேரும் (ம)

சரணங்கள்.

அருமறையுரை தங்கம் அசன்குதூசருள் சங்கம்
குருவாய் வருகுந்துங்க குதூபான வங்கம் (ம)
திரைகடல் ஓடிவங்கந் தெரிந்திடும்போது பங்கம்
வருகாமல்காத்த புங்கம் மகிமைச்சங்கம் (ம)
அருமைஸாகுல் ஹமீதே அனுதின மும்உகந்தே
சிறியேன்பக் கீர்முகம்மூதே செய்தருள் மீதே (ம)

மயிலே வடிவேலனேடேதிர் வா வா என்ற மெட்டு.
இந்துஸ்தான்–தோடி–சாப்பு–தாளம்.

பல்லவி

நாகூர் நவ நீதரே பதந் தா-தா (நா

அநுபல்லவி.

ஸாகுல்ஹமீதே தவமுயா கவுதே
தருணம் யேழைக்கே யருள்புரி யினிதே (நா)

சரணம்.

தாஹாவின் பேரு தவமுபர்தீரு
சஞ்சல மதைத்தீர்த் தருள்புரிவீரு (நா)
யேகனின் அருளாய் யிலங்கிய பொருளாய்
யிருபுவியிக்மீதிலே வரும் ஒலியாய் (நா)
வாகுசேர் நத்தம் வருகின்ற சத்தம்
வருகாமல்கார்த்தருள் செய்திர் சித்தம் (நா)
பாகுதேன் பதமே பணிந்தேனே சதமே
பக்கீர்முகம்மூதுக்கே திருள் நிதமே (நா)

பஹாரியால என்ற மெட்டு.
இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி

பல்லவி

ஷாகுல்ஹமீதே தயை செய் யெந்தன்மீதே (ஷா)

அநுபல்லவி.

நாகைநகர் மீதில்வாழும் நாத நீதரே
நாடியென்பக்திக்கருளநீ புரிவீரேஎந்தன் குருமேரே (ஷா)

சரணம்.

சாகரஞ்சூழும் இந்தப் பாரதனில் திரு
வாகியமுகம்மதெனும் பேர்வழியில் வருங்
காரணக்காதமுெலியார் தாயரைத னில்—பணி
வேமெனுளத்தில் (ஷா)

ஆதரவான திரு மகமேரே அரு
ளாணந்தப்பொரு ளுணர்ந்த ஞானயோரே
இந்த பூதலத்திலே ஒலியாய் சிறந்தோரோ வரம்
புரிந்தோரே (ஷா)

கோதிலாத தமிழ் பாடியுனை நிதந்
தேடியபக்கீர்முகம்ம தானவன் றனை
வாடிடாமல் காப்பதுங்கள் கடன்முனே அருள்
புரிகோனே (ஷா)

தாதாபாய் என்ற மெட்டு.

பல்லவி.

நாதாவே நாகூர் வாழ் நாதாவே (நா)

நருமலர்ப்பதம் பணிந்தேன் ஹமீது
பெருமையுற்றிடு அருமனறகமழ் (நா)

அநுபல்லவி.

பூதலமீதிலப்துல் காதிரெனவிளங்கும்
புங்கமகிமை நிறைந்து துலங்கிய
பங்கமிலா அருள் தங்கியிலங்கிய (நா)

தோகையரு.

காதங்கமழ்திரு நாதர்நபிவழி வருநல் கற்பகமாய்
நீதர் அஸன் குத்தூஸ் நற்றவமுற்ற நிதிமணியாய்

பல்லவித்தொடர்.

சோதியருள்தரித்து ஓதிமறைவிளைத்து
தொல்லுகதனில் அல்லலகற்றிடும்
வல்லவருகிய நல்லகுத்தூஸெனும் (நா)

தோகையரு.

தீதுருங்காபர்கள் வணங்கிடு புத்தைதிருப்பி வைத்தே
பேதகமில்லாமல் பேசிடவைத்த பேரின்ப முத்தே

பல்லவித்தொடர்.

நீதமுருங் காதிரொலி ஆதரவெனக்கருளீ
நிறைவே பக்கிரு முகம்மதுக்கருள்
தருகவரமே புரியுஞ்சற்குரு (நா)

மதீனமே மோரேஸசயா என்ற மெட்டு.
இராகம்—அமீர்கல்யாணி—தாளம்—ஆதி.

பல்லவி.

கஞ்சமலர்ப் பாதந்தாரும் காதரொலியே அப்துல்
காதரொலியே—அப்துல்—காதரொலியே (க)

அநுபல்லவி.

மஞ்சிமேசாலைசூழுந்தஞ்சை மன்னன்பிணிதன்னைத்தீர்த்த (க)

தோகையரு.

அஞ்சிதம் பொருந்திடுந் திருவாரூர் தேருருலாமல்செய்த
அதிகுண சுந்தரமே
அடங்காத முனிவன் உடம்பைக் கதிரவனால் வாட்டிய
அவுலியாக் கள்திலகமே.

முடுகுசசந்தம்.

அம்புவி யும்புகழ் சங்கை விளங்கும்
நம்பினவர்க் கருள் தந்து துலங்கும்
ஆகம யோகரை
வாகுயர் தீபரை

பல்லவியெடுப்பு.

அருங்குபிர் களைந்திட வருங்குத்து பெனுந்திடக் (க)

தோகையரு.

கொந்தளிப் புருங்கட லிடைவங்கம் உடைந்திடக்
கண்ணுடியாலடைந்த குணக்குன்றமே
சிந்தையில் வஞ்சம் யெண்ணியே பொல்லாததேவுயிர்
செகுத்த தவதுங்கமே.

முடுகுச்சந்தம்.

கந்தம் நிறைந்திடும் வீசஜைசேர் நாகை
வந்துவளர்ந்திடு சுந்தர சேகை
காவலே தாங்க
பாவல ரோங்க

பல்லவியெடு.

கவிசொல்பக்கிர் முகம்மதுக் கருள்புரியுஞ்சற்குரு (க)

அமாரநபி என்ற மெட்டு பின்முடுகு:
இராகம்—செஞ்சுருட்டி—தாளம்—ஆதி.

பல்லவி.

திருப்பதமேதாருஞ் செய்கப்துல் காதரே (தி)

அநுபல்லவி.

மருப்பொழில் நாகூர்வாளும் வள்ளல்ஹமீதே உங்கள் (தி)

சரணம்.

அருக்கடலா நந்தஞ்சேர் அகர்மது நபிபோர்
அதிநற்சுயகுண துதிகற்பகமென
பதிமுற்றிலுங் கன விதம்பற்றிய துணை (தி)

தோகையறா.

அரிவாளர் போற்றும் அசன்குத்தூஸருந்
தவததருள் பணிபே
யிருலோகமுத்தி யிறையோ னருள்பெற்ற
யெழில் மணியே.

ஷ சரணயெடுப்பு

குருவாகவே விளங்கிக் குதுபென வேதுளங்கி
குறையற்றிடு தவ நிரைவுற்றிடு நவ
முறைபெற்றிடு குவ தரைமுற்றிலும் புகழ் (தி)

தோகையறா.

கற்பூரதீபா தாரணைபெற்ற காதரொலி
யெனுங் கற்பகமே
பொற்பூத லத்தில் விற்பனர்போற்று
நல் பிரபலமே.

ஷ சரணமேப்பு.

நற்பதம்அனுதினம் நாடும்பக்கீர் முகம்மது
நயமே பொஅனு தினமே வரமருள்
சியசோபனமெனு மனமேயுகந் துங்கள் (தி)

அடுக்குமல்லிகை என்ற மெட்டு.
இராகம்—செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

காரணக்குருவானநாயகமே நாகூரில் வாழுங்
காதரொலியேகருணைத் தாயகமே யெங்கும்
கமழுஞ்சற்குரு வெனவிளங்கிய
அமிர்தகலச மெனத்துலங்கிய
சாருண்யப்பதந்தாருநற்கயமே எண்ணுளுநம்பினேன்
காவல்பற்றியே ஆளும்நற் றவமே (கா)

வாரியிற்ஜெபமணி விழுந்திடவே கிஸ்தியதனில்
வருந்தியெடுத்து சரந்தொடுத்திடவே நல
மார்க்கமதனில் யோர்க்கையாகவே
ஊக்கமணதில் பூக்கும் திருவே

வாரிசப்பதமெனக்குதவிடவே ஷாகுல்ஹமீதே
வறுமைநீக்கி அருள் கொடுத்திடுமே (கா)
பாரில்ஒப்பனையாருஞ் செப்பிடாரே திருவாலூரெனகிற
பட்டணஞ்சுற்றிடும் பாறையின்தேரே இந்தப்
படியில்நகள விடாமல் செய்து
கொடியமுனியை மடியச் செய்தோரே
பரமனருளைமிகவும்பெற்றவரே தபதியைன்பிணியே
பரக்கச்செய்திடும் வரங்கள் பெற்றவரே (கா)
பாரில்முத்தமிழ்யிசைக்குஞ்சிங்கையினன் அஸன்குத்தூசு
பாலர்பதத்தைத் துதிக்கும் விற்பனனும் கவி
பகரும் பக்கிரு முகம்மதுக்கருள்
புரியுஞ் சற்குரு யென விளங்கிய
பருதிபோலவே துலங்கு நற்பயனும் காதரொலியே
பாதுகாப்பதுன் மீதிலே கடனும் (கா)

பாலாபிஷேகப்பழனி என்ற மெட்டு.
இந்துஸ்தான்-பியாகு-சாப்பு-தாளம்.

வேதாருங்கனி யாகவிளங்கிய
வேந்தர் முஹம்மூது நாயகமே
ஆமுதவொளி வாகயிலங்கிய
அன்பர் கமழ்ந்திடும் தாயகமே

தோகையரு.

நாதநவநீத நற்போத கீதமே
ஆதிநாதெனு ஜோதியான மணிதீபமே.

அதிவிதசுவையுறு பதிமதினமீதுறை
கதியிருபதியிலும் உதவியசதமுர
நேசவிஸ்வாசங் காவலீம்ப்ரகாச
நேர்த்தியுடன் துதித்தே னேயுல்லாச (வே)

தோகையரு.

மாதலமீதிலே மாமறையூட்டிய
மலர் மணமே
கோதிலா சீதக்குடையுரு லாஞ்சனைக்
குருகவே.
கொடியவ னபுசகி லடிபட பதுரிலே
தடமுறு காமிசை பிடிமணல் மிடலிலே
கோவல்சூழ்மக்கம் மஹம்மதுடன்பக்கம்
கோரும்பக்கீர்முஹம்மூ துக்கருள்முக்யம் (வே)

யெங்குபுகழ்மாமாதாசி என்ற மெட்டு.

சதுர் மாமறைப்பொருள் நாதா வுங்கள்
தாழிணைத்தர வாதா சதிர்மாமதியமைத்தாதாய்
கதிகாட்டுங்கருணை கூட்டும் நலமே
தேட்டம்வன் பதம் நாட்டமே (ச)
ஜகம்புகழுங் கற்பகக் காவே நல்
தாவிமாகியபூவே பிகபரமருள்புரி கோவே
யிச்சையாய் ரக்ஷகா
பச்சமேவைத்திடும் அக்ஷமிலா (ச)
அதிவிதசுகிர்தநற் பதமே அனுதினமும்
பணிந்தேன்சதமே பதிமதினமீதுரை
துறையே பத்தியாய் நித்தமும் நத்தினேன்
சித்தம்வை யித்ததியே (ச)
அகம்மதெனும் நல் மணியே அரு
ளாணந்தக் கவிக்கணியே சுகம்பெறஅனுதினம்
மணியே நிதங் துதிக்கும் பக்கிரு
முகம்மதுக்கருள்ருசிக்கும் படிக்கேகிடைக்கவே (ச)

அய்யாபழனிமலை வேலா என்ற மெட்டு.

செந்தாமரைப் பொற்பதந்தாருஞ்
செய்குஸாகுல் ஹமீதேயென்னைக்காரும்-உயர்
விந்தம்நிறைந்த நாகூர்சேரும்-திரு
வேந்தறப்துல் காதரே பாரும் (செ)
சுந்தங்கமழுமக மேரே-யிந்தக்
காசினியில் ஒலியானேரே-உயர்
சுந்தரமானயெந்தன் பீரே-தினந்
துதித்தேன் கருணைசெய்குவீரே (செ)
கொந்தலிப்பா னகடல்மீதே-வங்கம்
கோசுற்றுடைந்திடு மப்போதே-திரு
இந்தியினாலடைத்தீ ரப்போதே-திரு
கிருபாகரப்பிர பென்மீதே (செ)
சந்ததமுமுங்களையே ஞடி-நல்ல
தமிழைஉகந்துபதம் பாடி-வரும்
மைந்தன்பக்கீர்முகம் முதைத்தேடி-நல
வாந்தருவீர் ஹமீதேநாடி (செ)

ஆயோசையர் என்ற மெட்டு.

பல்லவி.

நயியாரைலே நம்பினேன்யிருதாளை
நயமேதந்தாழ் மென்மேலே (ந)

அநுபல்லவி.

கவின்சேர்குடை யுடைய நாதா
கதியருளுந் தாதா
துதிபரவும் நீதா
புவிபுகழும் வேதா
கமலமல ரிருபதமே தரவருவீர் நறைகமழும் (ந)
மாவலஞ்சூழும் மதினகர்கோவே
மகிமையுல பூவே
செவைசெயும்பக்கீர் முகம்மூது
சிரியேன்மீது பாது
செயும்அருள் தப்பாது
சிகமீதுஒப் பேது
திருநபிமார் சிரமகுட நவநிதியா யெனவிழங்கு (ந)

கருவினுருவாகி என்ற மெட்டு.

திருவெனவேஉலகமெலாம் நிரைந்தபரம்பொருளொளிவில்
திரள்தரள மணியெனவே உருவாகி
திரிபுவனமும்மதிக்கும் அருசதனிலேயிருந்து
சிறந்தஜப ரூத்திலன்ன மெனவாகி
தருவுகள்நிரைந்தசொர்க்க நகரினில்யெக்கீன்மரத்தில்
தாவுமயி லாகிலாகூ வெனக்கூவி
தாம்பெருகுஞ்சதுர்பானம் யிருந்தவர்குதூபெனவே
தாவுகுயி லாகிப்புரு வினமாகி
தரணிதனிலாதநபி யிருகரமுதூகதனில்
தகதகெனவே துலங்கி யெழிலாகி
தருவனையசிதுநபி மரபின்வழிவழிவருகுங்
தருமநிரைஅப் துல்லாவின் நுதல்மீதே
தரளமெனவேதுலங்கி மருமலர்ப்பூங்குழலமீனார்
தவமதனிலே பிறந்த முகம்மூதே
தரவருவீர்பதமலரை தமியேன்பக்கீர்முகம்மதின்மேர்
தயைபுரிவீர் அகம்மதெனும் யிரசூலே

---

கலித்துறை.

குருவா முஹம்மதே அனுதினம்பாடும் குழந்தையென்மேல்
அருளேபுரிந்து பக்கீர் முஹம்மதை ஆதரித்து
இருலோக முத்தி மிகவேகொடுக்க எழில்மணியே
வருவீர் யென்னுவில் துதிபாட வள்ளல்முஹம்மதுவே.

கனகரெத்தினக் கீர்த்தனே முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183519

சோமசேகரேனருளும் என்ற மெட்டில் பின் மகுடம்.

பல்லவி

அங்கங்கமழ்பொங்கும் நறை வாசரடி எங்கள்
ஆயீனறின்றதவப் பாலரடி (அங்)

அநுபல்லவி.

மங்குல்குடைசூழுந்தவத் துங்கநவநீதரடி
மறைபுகழ்திரு நபியெனவரும்
பெருமைமதினு துறையெனவுறும்
மாசிலாநாயக ராகியகாரணர்
ஆசின்குலக்கொ ழுந்தாகியபூரணர் (அங்)

சங்கைமிகும்பங்க யிலாநீதரடி உயர்
பிகுல்முதநபீ னெனுஞ்சொல்வேதரடி
திங்கள்தனையேபழைத்த துங்கமுகம்மூதரடி
திருவிறைபரு சதனிலேறிய
ரகசியமதாய்த் தெரிசனம்பெற்றோர்
தினகரனுடன் உரைபகர்ந்தவர்
குணவசிகர ரெனவிளங்கிய (அங்)

சங்கமுலவும்பதுரிற் சென்றோடிபொல்லாத
காதகர்களுயிரை மண்ணில்கொய்தோரடி
வங்கமெனவேஉலகில் வந்தநவநீதறடி
மன்றோடியும்மத்தைச் சென்றேகரைசேர்க்கும்
திண்டோமுராகிய குன்றுநவமணி
வரிசைமிகவே குரையாமாமணி
அரசர்கரச ரெனுஞ்செழுமணி (அங்)

புங்கமிருகத்தங்கும்அருள் நாதரடி இந்தப்
பூதலத்தில்தீன்பயிர் விளைத்தோரடி
எங்கும்புகழ்வேத ரெனும்யேர்தலடி
யிசைக்கும்பக்கீரு மூகம்மதுக்கருள்
ருசிக்கும்படிக்கே கொடுக்குங்கற்பகம்
யிருபதியிலும் அருள்புரிகுவார்
குருமுகம்மதாய் வருவார்யிறசூல் (அங்

# முக்கிய கவனிப்பு.

நீங்களொவ்வொருவரும் யோக சாதனத்தை
அடைய விரும்புகிறீர்களா?
அவ்விதம் அடைய விரும்பினால்,
ஓலையேட்டுப்பிரதியிலிருந்த
அரிய பெரிய சாஸ்திரங்களை
புதிதாய் அச்சிட்டிருக்கும்
அடியிற்கூறிய சாஸ்திரத்தை
வாங்கி வாசித்துணருங்கள்.

## தேவரிஷி முனிசித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய,
வைத்திய வாதயோக

# ஞானசாஸ்திரதிரட்டு.

இக்குக்காயிதத்தில் சுத்தப்பிரதியாய் 10-பாகங்களாக அச்சிட்டிருக்கிறது. பாகம் 1-க்கு ரூ. 1, இப்புத்தகமும் இன்னும் அனேக புத்தகங்களும் குறைந்த விலைக்கு நேரிலும் தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
கு. இராமசாமிக்கோன்,
புக்ஷாப் புதுமண்டபம்,
மதுரை.